க.து.ந.க.எண்.பி3/2621/2007
ஆணையர் அவர்களின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :150/2008 பொருள் எண்.42

### ரிப்பன் மாளிகை புதுப்பிக்கும் பணி – கலந்தறிக்கட்டணம் நிர்ணயம் செய்தல்

சென்னை மாநகராட்சியின் 2007–08 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் மாமன்றத்தில் அறிவித்த திட்டங்களில் ‘‘ரிப்பன் மாளிகையை புதுப்பித்தல்’’ ஒன்றாகும். இதன்படி ரிப்பன் மாளிகை கட்டடத்தை முழுவதுமாக புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாளிகையின் கட்டடக்கலை மற்றும் கலை அம்சத்தை பேணிக்காக்கும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

ரிப்பன் மாளிகையை புதுப்பிக்கும் நடவடிக்கையாக கீழ்க்கண்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1. தலைமை பொறியாளர் (க(ம)பா), சென்னை மாநகராட்சி
2. சூபரின்டெண்டிங் ஆர்காலஜிஸ்ட், (Superintending Archaeologist, ASI Chennai Circle)
3. கூட்டுநர், இந்திய தேசிய பாரம்பரிய கலை மற்றும் கலாச்சார அமைப்பு (Convener, INTACH)
4. ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை.
5. ஓய்வு பெற்ற இணை தலைமை கட்டடக் கலைஞர் பொதுப்பணித்துறை.

இக்குழுவின் முதல் கூட்டம் 27.12.2007 அன்று நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட முடிவின்படி இப்பணியில் குறைந்தபட்ச ஐந்து வருடங்கள் அனுபவமுள்ள பேணுகை கட்டடக் கலைஞர் (Conservation Architect) தெரிவு செய்ய நாளிதழ்கள் மூலம் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு, இதற்கான கடைசி நாளான 22.02.2008 அன்று கீழ்க்கண்டவர்களிடமிருந்து நான்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

1. திருவாளர்கள். ஜி.ஏ.ஆர்கிடெக்ட்ஸ்
2. திருவாளர்கள்.ரவி குண்டுராவ் & அசோசியேட்ஸ்
3. திருவாளர்கள்.ஆஸ்கார் காண்செஸ்சாவ்
4. திருவாளர்கள்.K.கல்பனா

மேற்கண்ட நான்கு விண்ணப்பங்களில் திருவாளர்கள்.ஆஸ்கார் காண்செஸ்சாவ் அவர்கள் முன்அனுபவ தகுதி விவரங்கள் அளிக்காததால் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மற்ற மூன்று விண்ணப்பதாரர்களும் 10.03.2008 அன்று ரிப்பன் மாளிகை சீராக்கம் குழு (Ripon Buildings Restoration Committee)வின் முன் தங்கள் அனுபவங்களின் விவரங்களை பவர்பாயிண்ட் மூலம் அறிமுகப்படுத்திக்கொண்டனர். இதனடிப்படையில் உறுப்பினர்கள் அளித்த மதிப்பீடுகளின்படி திருவாளர்கள்.ரவி குண்டுராவ் & அசோசியேட்ஸ் அவர்கள் ரிப்பன் மாளிகை புதுப்பித்தல் பணிக்கான பேணுகைக் கட்டடக்கலைஞராக ((Conservation Architect) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் 17.03.2008 அன்று பெறப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேணுகை கட்டடக் கலைஞர் திருவாளர்கள்.ரவி குண்டுராவ் & அசோசியேட்ஸ் அவர்களை மேற்கண்ட பணிக்கான கலந்தறிக்கட்டண விவரங்களை அளிக்கும்படி கேட்டுக்கொண்டதில், பேச்சுவார்த்தைக்குப்பின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 3.90 விழுக்காடு கலந்தறிக்கட்டணமாக அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள் மற்றும் செலுத்தவேண்டிய கலந்தறிக்கட்டண அட்டவணை விவரங்கள் கீழ்வருமாறு :

**க.து.ந.க.எண்.பி3/2621/2007**

| | | | |
|---|---|---|---|
| 1. | To Prepare a Preliminary Survey Report, Data Collection, Presentation. | - | 5% |
| 2. | Detailed surveys, Preparing conservation plans & Methodology, Presentation. | - | 10% |
| 3. | Preparation of detailed specifications based on ASI Standards | - | 10% |
| 4. | Preparation of Estimates & Working drawings. | - | 10% |
| 5. | Preparation of Tender Document to call for bid with proper Technical pre-qualification of bidders. | - | 5% |
| 6. | Finalisation of Tender | - | 10% |
| 7. | During the Commencement & execution | - | 30% |
| 8. | Final Stage of Completion of work | - | 20% |

எனவே, ரிப்பன் மாளிகை கட்டடத்தை புதுப்பித்தல் பணிக்காக திருவாளர்கள்.ரவி குண்டுராவ் & அசோசியேட்ஸ் அவர்களை பேணுகை கட்டடக் கலைஞராக தெரிவு செய்யவும் மற்றும் இவருக்கு பணியின் மொத்த மதிப்பீட்டுத்தொகையில் **3.90** விழுக்காடு கலந்தறிக்கட்டணமாக மேற்கண்ட அட்டவணைப்படி வழங்கிடவும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**10.04.2008** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். **89/08** , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"**16.4.2008** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**47/2008** நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/371/2008**
**ஆணையரின்09.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :151/2008 பொருள் எண்.43

**கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி தோராய மதிப்பீட்டுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, கீழ்கண்ட போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டது.

TNUIFSL மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee) ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்புகளில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்க்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியார் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம்(Transfer of Development Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்,
3. பெறப்படும் வடிவமைப்பின் படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும், பெறப்பட்டுள்ளது.

கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர். கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனிடையே மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக ரூ.8,22,23,000/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சாரவாரியம் தனது கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.13,16,425/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால். இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.61,70,00,000/–க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் தோராய மதிப்பீட்டு தொகைக்கு மன்ற ஒப்புதல் மற்றும் அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும். எனவே, இக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படின் கீழ்க்காணும் இனங்களுக்கு

**பா.து.ந.க.எண்.பி3/371/2008**

1. கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நிலஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.61,70,00,000/–க்கு அனுமதியும்,
2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,
3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை தவணை முறையில் வழங்க அனுமதியும்,
4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 91/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.48/2008 நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/900/2007**
**ஆணையரின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :152/2008 பொருள் எண்:44

**எல்.பி.சாலை மற்றும் திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணி தோராய மதிப்பீட்டுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

நெடுஞ்சாலை துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு போக்குவரத்து நெரிசல் மிகுந்த எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TUNIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் வில்பர் ஸ்மித் அசோசியட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. இதனிடையில் எல்.பி.சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலிருந்து சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டது.

TNUIFSL மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination Committee) ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் இச்சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் வில்பர் ஸ்மித் அசோசியட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மேலும் இதற்குண்டான மன்றத்தீர்மான எண்.640/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்புகளில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்க்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியார் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம்( Transfer of Development Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்
3. பெறப்படும் வடிவமைப்பின்படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும்,

கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் வில்பர் ஸ்மித் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர். கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனிடையே மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக ரூ.4,69,11,000/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் தனது கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.2,04,53,060/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால் இம்மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.126,40,00,000/–க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் தோராய மதிப்பீட்டு தொகைக்கு மன்ற ஒப்புதல் மற்றும் அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும். எனவே, இக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படின் கீழ்க்காணும் இனங்களுக்கு

**பா.து.ந.க.எண்.பி3/900/2007**

1. எல்.பி.சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நில ஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.126,40,00,000/–க்கு அனுமதியும்,

2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,

3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை தவணை முறையில் வழங்க அனுமதியும்,

4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 92/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 49/2008 நாள்:16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/722/2006**
**ஆணையர் அவர்களின் 08.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :153/2008 பொருள் எண்.45

**மண்டலம் –7 மற்றும் 8ல் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் மேம்பாலங்கள் அமைத்தல் – குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்களை மாற்றியமைப்பதற்கு – முன்பணம் வழங்க அனுமதி கோரல்**

மண்டலங்கள் 7 மற்றும் 8ல் போக்குவரத்து நெரிசல் மிகுந்த கீழ்கண்ட நான்கு சந்திப்புகளில் மேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டது.

(1) வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர்.சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பு, கோட்டம் 107, மண்டலம் 7 மற்றும் கோட்டம் 119, மண்டலம் 8
(2) உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாமி சந்திப்பு, கோட்டம் 126 மற்றும் 127, மண்டலம் 8
(3) கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு, கோட்டம் 108, மண்டலம் 7 மற்றும் கோட்டம் 128, மண்டலம் 8
(4) பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, கோட்டம் 116, மண்டலம் 8

சென்னை குடிநீர் வாரியம் 10.11.2006 நாளிட்ட கடிதத்தில் சேமியர்ஸ் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் குடிநீர் குழாய்களை மாற்றியமைப்பதற்கு சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் கோரிய தொகையான ரூ.81.75 லட்சங்கள் சென்னை மாநகராட்சியால் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்கு உட்பட்டு அளிக்கப்பட்டது.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலம் பணி தொடங்குமுன், இச்சந்திப்பின் அருகே அமைந்துள்ள பல நலச்சங்கள் சேமியர்ஸ் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பின் வழியாக மேம்பாலம் அமைக்கப்பட்டால் உண்டாகும் பயனை விட முத்துராமலிங்கம் சாலையின் குறுக்கே செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைத்தால் பெருமளவு பயனளிக்கும் என கடிதங்களின் மூலம் கருத்து தெரிவித்திருந்ததால் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் பால ஒழுங்கு மாற்றமாக செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே, 14.03.2008 நாளிட்ட குடிநீர் வாரியம் அளித்துள்ள கடிதத்தில் செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலையில் திருத்திய ஒழுங்கின்படி அமையவிருக்கும் மேம்பாலப்பகுதியில் உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை மாற்றியமைப்பதற்கு திருத்திய மதிப்பீட்டுத்தொகையாக ரூ.183.49 லட்சங்கள் கோரியுள்ளது. மேற்கண்ட சென்னை குடிநீர் வாரியத்தின் கடிதத்தில் சென்னை மாநகராட்சியால் ஏற்கனவே அளிக்கப்பட்ட தொகையான ரூ.81.75 லட்சங்களில் பூர்வங்காப்பணிகளுக்கான செலவினங்கள் போக ரூ.75.39 லட்சங்கள் மீதம் உள்ளதாகவும், தற்போது திருத்திய ஒழுங்கின் மதிப்பீட்டுத் தொகையான ரூ.183.49 லட்சங்களில் மீதமுள்ள தொகை போக ரூ.108.10 லட்சங்கள் அளிக்குமாறு கோரியுள்ளனார். மேற்படி திருத்திய ஒழுங்கின்படி மேம்பாலம் அமையவுள்ள பகுதியில் சேவைத்துறையினரின் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை மாற்றியமைக்கும் பணிக்கு ரூ.108.10 லட்சங்கள் அளிக்கப்பட வேண்டும்.

எனவே கீழ்க்கண்டவற்றிற்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. இப்பணிக்காக ஏற்கனவே சென்னை மாநகராட்சியால் சேவைத்துறையினருக்கு வழங்கப்பட்ட முன்பணத் தொகையான ரூ.81.75 லட்சங்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. சென்னை குடிநீர் வாரியம் அளித்துள்ள திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.183.49 லட்சங்களை ஏற்கவும்.
3. 2008–2009ம் நிதியாண்டில் பாலங்கள் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூலதன தொகையிலிருந்து முன்பணமாக பெற்று சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு ரூ.108.10 லட்சங்கள் கட்டணமாக செலுத்திடவும்.

<u>பா.து.ந.க.எண்.பி3/722/2006</u>

4. சென்னை குடிநீர் வாரியம் கோரியுள்ள ரூ.108.10 லட்சங்கள் 2008 – 2009ம் ஆண்டு பாலங்கள் துறையின் வரவு செலவு குறியீட்டு எண்.496ல் முன்பணமாக பெற்று வழங்கவும்,

5. முன்பணப்பட்டியை பகுதி கணக்கு குழுமம் (பணி)க்கு அனுப்பி சென்னை குடிநீர் வாரியத்திற்கு C.M.W.S.S.B என்ற பெயரில் காசோலையாகப் பெறவும்.

6. பெறப்பட்ட முன்பணத்தை இப்பணிக்கான திட்டக்குறியீட்டு எண். 4JV254106ல் நேர்செய்ய அனுமதியும்.

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 93/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 50/2008 நாள்:16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.　　　　　மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி1/0050/2008**
**ஆணையர் அவர்களது 09–04–2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :154/2008 பொருள் எண்.46

**ஒப்பந்தம்**

சென்னை மாநகரில் உலகத் தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை நகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்க அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 364 எண்ணிக்கை கொண்ட பழைய பேருந்து நிழற்குடைகளுடன் 29.11.07 அன்று மாநகர போக்குவரத்துக் கழகத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 248 பேருந்து நிழற்குடைகளில் நீதி மன்ற வழக்குகளுக்குட்படாத 136 பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளைக் கட்டுவதற்கு முதற்கட்டமாக ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின் படி கட்டி, 12 வருடங்கள் நல்ல முறையில் பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் இவ்வொப்பங்கள் கோரப்பட்டன. இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக்கு எந்த செலவினமும் இல்லை. இந்த 500 நிழற்குடைகளை கீழ்காணும் படி மண்டல வாரியாக தொகுத்து நான்கு சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

சிப்பம் – 1

மண்டலம்–1 + மண்டலம் +2 + மண்டலம் 7 = 133 எண்ணிக்கை

சிப்பம் – 2

மண்டலம்–3 + மண்டலம் +4 + மண்டலம் 8 = 153 எண்ணிக்கை

சிப்பம் – 3

மண்டலம்–5 + மண்டலம் +9 = 96 எண்ணிக்கை

சிப்பம் – 4

மண்டலம்–6 + மண்டலம் 10 = 115 எண்ணிக்கை

------------------

மொத்தம் = 500 எண்ணிக்கை

------------------

இதில் சிப்பம் – 2 க்கான ஒப்பங்கள் கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 22.2.08 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

மேற்கூறிய இரு ஒப்பந்ததாரர்களின் முன்தகுதி ஆவணங்கள் மற்றும் கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இப்பணிக்காக ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட்ட கலந்தறிபவர்களான திருவாளர்கள் கம்யூனிட்டி கன்சல்ட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தால் ஆய்வு மேற்கொண்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்களும் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பெற்றிருந்ததால் இவர்களின் தொழில்நுட்ப ஒப்பங்கள் 17.3.08 அன்று திறக்கப்பட்டு ஒப்ப மேலாண்மை கலந்தறிபவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

இவர்களின் (Financial Bid) நிதி ஒப்பங்கள் 28.03.08 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அவர்கள் அளிக்க முன் வந்த சலுகைக்கட்டணம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

**பே.சா.து.ந.க.எண்.பி1/0050/2008**

| வரிசை எண் | சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகைக்கட்டணம் | ஒப்பந்ததாரர்களால் குறிப்பிடப்பட்ட சலுகை கட்டணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் | திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் | |
| 1 | ரூ. 45,00, 000/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) | ரூ.4,05,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) | ரூ.83,25,000/-(ரூபாய் எண்பத்து மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) | |

மேற்கூறிய ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) என்ற ஒப்பந்ததாரர் மிக அதிக பட்ச சலுகை கட்டணமாக ரூ.4,05,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்ச ரூபாய்) அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஒப்பந்தக் குழு 8.04.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வொப்பந்தத்தை பரிசீலனை செய்து அதிகபட்ச சலுகை தொகை குறிப்பிட்டுள்ள திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) ஒப்பந்ததாரருக்கு ஒப்பத்தை பரிந்துரை செய்துள்ளது.

எனவே திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் (Adlabs Films Ltd,) அவர்களுக்கு சிப்பம் - 2ன் (Package-2)-கீழ்வரும் 153 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் அடிப்படையில் வழங்க கீழ்காணும் இனங்களுக்கு,

1) அதிக சலுகை கட்டணமாக ரூ. 4,05,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் அளித்த திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( Adlabs Films Ltd,) என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் - 2 (package-2)-ன் கீழ் வரும் 153 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியை வழங்க ஒப்புதலும்,
2) ஒப்ப விதிகளின் படி 12 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் 5சதவீதம் இச்சலுகை கட்டணத்தை உயர்த்தி தரவும் ,
3) இப்பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைத்து அதில் குறிப்பிட்ட அளவிற்கு விளம்பரப்பலகை வைத்துக்கொள்ள, கொள்கை முடிவிற்காகவும் (Policy decision) மற்றும் அரசின் அனுமதி கோரவும்,
4) அரசின் கொள்கை முடிவிற்கான ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு தற்காலிகமான பணி ஆணை (Provisional Work Order) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டியும் ,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 94/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 51/2008 நாள்:16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"விளம்பர பலகைகள் அகற்றுவதற்கு முன்னர் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளதால், தற்பொழுது விளம்பர பலகைகள் அகற்றப்பட்ட பின்னர் அதிக வருமானம் வர வாய்ப்புள்ளதால் மறு ஒப்பந்தங்கள் கோர மன்றம் தீர்மானிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :155/2008 பொருள் எண்:47

**ஒப்பந்தம்**

சென்னை மாநகரில் உலகத் தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை நகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்க அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 364 எண்ணிக்கை கொண்ட பழைய பேருந்து நிழற்குடைகளுடன் 29.11.07 அன்று மாநகர போக்குவரத்துக் கழகத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 248 பேருந்து நிழற்குடைகளில் நீதி மன்ற வழக்குகளுக்குட்படாத 136 பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளைக் கட்டுவதற்கு முதற்கட்டமாக ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின் படி கட்டி, 12 வருடங்கள் நல்ல முறையில் பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் இவ்வொப்பங்கள் கோரப்பட்டன. இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக்கு எந்த செலவினமும் இல்லை. இந்த 500 நிழற்குடைகளை கீழ்காணும் படி மண்டல வாரியாக தொகுத்து நான்கு சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

| | | |
|---|---|---|
| சிப்பம் – 1 | | |
| மண்டலம்–1 + மண்டலம் +2 + மண்டலம் 7 | = | 133 எண்ணிக்கை |
| சிப்பம் – 2 | | |
| மண்டலம்–3 + மண்டலம் +4 + மண்டலம் 8 | = | 153 எண்ணிக்கை |
| சிப்பம் – 3 | | |
| மண்டலம்–5 + மண்டலம் +9 | = | 96 எண்ணிக்கை |
| சிப்பம் – 4 | | |
| மண்டலம்–6 + மண்டலம் 10 | = | 115 எண்ணிக்கை |
| மொத்தம் | = | 500 எண்ணிக்கை |

இதில் சிப்பம் – 3 க்கான ஒப்பங்கள் கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 22.2.08 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)

2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)
3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)
4) திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s, Laqshya Media Pvt. Ltd.,)

5) திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,)

6) திருவாளர்கள் நார்த்கேட் டெக்னாலாஜிஸ் லிமிடெட்(M/s. North Gate Technologies Ltd.,)

மேற்கூறிய ஆறு ஒப்பந்ததாரர்களின் முன்தகுதி ஆவணங்கள் மற்றும் கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இப்பணிக்காக ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட்ட கலந்தறிபவர்களான திருவாளர்கள் கம்யூனிட்டி கன்சல்ட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தால் ஆய்வு மேற்கொண்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் திருவாளர்கள் நார்த்கேட் டெக்னாலாஜிஸ் லிமிடெட்(M/s. North Gate Technologies Ltd.,) என்ற ஒப்பந்ததாரர் பேருந்து நிழற்குடைகள் கட்டியதற்கான முன்அனுபவ ஆவணங்கள் எதையும் அளிக்காகததால் இவர்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. எனவே கீழ்காணும் ஐந்து ஒப்பந்ததாரர்கள் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பெற்றிருந்ததால் இவர்களின் தொழில்நுட்ப ஒப்பங்கள் 17.3.08 அன்று திறக்கப்பட்டு ஒப்ப மேலாண்மை கலந்தறிபவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)

2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)

4) திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s, Laqshya Media Pvt. Ltd.,)

5) திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,)

மேற்கூறியவர்களில் திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,) அவர்களின் தொழில்நுட்ப ஒப்பந்தத்தை ஆய்வு செய்ததில் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பந்தத்தை அளித்தது மட்டுமல்லாமல் சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பையும் மாற்றி தொழில்நுட்ப ஒப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனவே, இவர்களின் தொழில்நுட்ப ஒப்பம் நிராகரிக்கப்பட்டு கீழ்காணும் நான்கு ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பங்கள் திறக்கப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)

2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)

4) திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s, Laqshya Media Pvt. Ltd.,)

இவர்களின் (Financial Bid) நிதி ஒப்பங்கள் 28.03.08 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அவர்கள் அளிக்க முன் வந்த சலுகைக்கட்டணம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகை கட்டணம் | ஒப்பந்ததாரர்களால் குறிப்பிடப்பட்ட சலுகை கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|
| | | திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் | திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் | திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் | திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் |
| 1 | ரூ. 45,00, 000/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) | ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) | ரூ.1,62,00, 000/–(ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு லட்சம் மட்டும்) | ரூ.99,94,561/– (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐந்நூற்று அறுபத்தி ஒன்று மட்டும்) | ரூ.1,06,00,000/– (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சம் மட்டும்) |

மேற்கூறிய ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) என்ற ஒப்பந்ததாரர் மிக அதிக பட்ச சலுகை கட்டணமாக ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்ச ரூபாய்) அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஒப்பந்தக் குழு, 8.04.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இவ்வொப்பந்தத்தை பரிசீலனை செய்து அதிகபட்ச சலுகை தொகை குறிப்பிட்டுள்ள திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) ஒப்பந்ததாரருக்கு ஒப்பத்தை பரிந்துரை செய்துள்ளது.

எனவே திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் (Adlabs Films Ltd,) அவர்களுக்கு சிப்பம் – 3ன் (Package-3)-கீழ்வரும் 96 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் அடிப்படையில் வழங்க கீழ்காணும் இனங்களுக்கு,

1) அதிக சலுகை கட்டணமாக ரூ. 4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் அளித்த திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( Adlabs Films Ltd,) என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் – 3 (package-3)-ன் கீழ் வரும் 96 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியை வழங்க ஒப்புதலும்,

2) ஒப்ப விதிகளின் படி 12 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் 5சதவீதம் இச்சலுகை கட்டணத்தை உயர்த்தி தரவும் ,

3) இப்பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைத்து அதில் குறிப்பிட்ட அளவிற்கு விளம்பரப்பலகை வைத்துக்கொள்ள, கொள்கை முடிவிற்காகவும் (Policy decision) மற்றும் அரசின் அனுமதி கோரவும்,

4) அரசின் கொள்கை முடிவிற்கான ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு தற்காலிகமான பணி ஆணை (Provisional Work Order) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டியும் ,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 95/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 52/2008 நாள்:16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"விளம்பர பலகைகள் அகற்றுவதற்கு முன்னர் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளதால், தற்பொழுது விளம்பர பலகைகள் அகற்றப்பட்ட பின்னர் அதிக வருமானம் வர வாய்ப்புள்ளதால் மறு ஒப்பந்தங்கள் கோர மன்றம் தீர்மானிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி1/0052/2008
ஆணையர் அவர்களது 09–04–2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :156/2008 பொருள் எண்.48

**ஒப்பந்தம்**

சென்னை மாநகரில் உலகத் தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை நகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்க அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 364 எண்ணிக்கை கொண்ட பழைய பேருந்து நிழற்குடைகளுடன் 29.11.07 அன்று மாநகர போக்குவரத்துக் கழகத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 248 பேருந்து நிழற்குடைகளில் நீதி மன்ற வழக்குகளுக்குட்படாத 136 பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளைக் கட்டுவதற்கு முதற்கட்டமாக ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின் படி கட்டி, 12 வருடங்கள் நல்ல முறையில் பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் இவ்வொப்பங்கள் கோரப்பட்டன. இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக்கு எந்த செலவினமும் இல்லை. இந்த 500 நிழற்குடைகளை கீழ்காணும் படி மண்டல வாரியாக தொகுத்து நான்கு சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

சிப்பம் – 1
மண்டலம்–1 + மண்டலம் +2 + மண்டலம் 7 = 133 எண்ணிக்கை

சிப்பம் – 2
மண்டலம்–3 + மண்டலம் +4 + மண்டலம் 8 = 153 எண்ணிக்கை

சிப்பம் – 3
மண்டலம்–5 + மண்டலம் +9 = 96 எண்ணிக்கை

சிப்பம் – 4
மண்டலம்–6 + மண்டலம் 10 = 118 எண்ணிக்கை

மொத்தம் = 500 எண்ணிக்கை

இதில் சிப்பம் – 4 க்கான ஒப்பங்கள் கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 22.2.08 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)
3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)
4) திருவாளர்கள் லக்ஷ்யா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Laqshya Media Pvt. Ltd.,)
5) திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,)

<u>பே.சா.து.ந.க.எண்.பி1/0052/2008</u>

6) திருவாளர்கள் நார்த்கேட் டெக்னாலாஜிஸ் லிமிடெட்(M/s. North Gate Technologies Ltd.,)

மேற்கூறிய ஆறு ஒப்பந்ததாரர்களின் முன்தகுதி ஆவணங்கள் மற்றும் கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இப்பணிக்காக ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட்ட கலந்தறிபவர்களான திருவாளர்கள் கம்யூனிட்டி கன்சல்ட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தால் ஆய்வு மேற்கொண்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் திருவாளர்கள் நார்த்கேட் டெக்னாலாஜிஸ் லிமிடெட்(M/s. North Gate Technologies Ltd.,) என்ற ஒப்பந்ததாரர் பேருந்து நிழற்குடைகள் கட்டியதற்கான முன்அனுபவ ஆவணங்கள் எதையும் அளிக்காகததால் இவர்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. எனவே கீழ்காணும் ஐந்து ஒப்பந்ததாரர்கள் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பெற்றிருந்தததால் இவர்களின் தொழில்நுட்ப ஒப்பங்கள் 17.3.08 அன்று திறக்கப்பட்டு ஒப்ப மேலாண்மை கலந்தறிபவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)
3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)
4) திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s, Laqshya Media Pvt. Ltd.,)
5) திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,)

மேற்கூறியவர்களில் திருவாளர்கள் ஜே.சி. டெக்காவ் அட்வர்டைசிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s.JC Decaux Advertising India Pvt. Ltd.,) அவர்களின் தொழில்நுட்ப ஒப்பந்தத்தை ஆய்வு செய்ததில் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பந்தத்தை அளித்தது மட்டுமல்லாமல் சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பையும் மாற்றி தொழில்நுட்ப ஒப்பம் சமர்பிக்கப்பட்டிருந்தது. எனவே, இவர்களின் தொழில்நுட்ப ஒப்பம் நிராகரிக்கப்பட்டு கீழ்காணும் நான்கு ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பங்கள் திறக்கப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)
3) திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் (M/s. Times Innovative Media Pvt. Ltd.,)
4) திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s, Laqshya Media Pvt. Ltd.,)

இவர்களின் (Financial Bid) நிதி ஒப்பங்கள் 28.03.08 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அவர்கள் அளிக்க முன் வந்த சலுகைக்கட்டணம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகை கட்டணம் | ஒப்பந்ததாரர்களால் குறிப்பிடப்பட்ட சலுகை கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|
| | | திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் | திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் | திருவாளர்கள் டைம்ஸ் இன்நோவேடிவ் மீடியா பிரைவேட் லிமிடெட் | திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் |
| 1 | ரூ. 45,00, 000/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) | ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) | ரூ.1,68,75, 000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து எட்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) | ரூ.3,15,91,654/– (ரூபாய் மூன்று கோடியே பதினைந்து லட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து அறுநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) | ரூ.69,00,000/– (ரூபாய் அறுபத்தைந்து லட்சம் மட்டும்) |

**பே.சா.து.ந.க.எண்.பி1/0052/2008**

மேற்கூறிய ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) என்ற ஒப்பந்ததாரர் மிக அதிக பட்ச சலுகை கட்டணமாக ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்ச ரூபாய்) அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஒப்பந்தக் குழு, 8.04.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இவ்வொப்பந்தத்தை பரிசீலனை செய்து அதிகபட்ச சலுகை தொகை குறிப்பிட்டுள்ள திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) ஒப்பந்ததாரருக்கு ஒப்பத்தை பரிந்துரை செய்துள்ளது.

எனவே திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் (Adlabs Films Ltd,) அவர்களுக்கு சிப்பம் – 4ன் (Package-4)-கீழ்வரும் 118 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் அடிப்படையில் வழங்க கீழ்காணும் இனங்களுக்கு,

1) அதிக சலுகை கட்டணமாக ரூ. 4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் அளித்த திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( Adlabs Films Ltd,) என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் – 4 (package-4)-ன் கீழ் வரும் 118 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியை வழங்க ஒப்புதலும்,
2) ஒப்ப விதிகளின் படி 12 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் 5சதவீதம் இச்சலுகை கட்டணத்தை உயர்த்தி தரவும் ,
3) இப்பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைத்து அதில் குறிப்பிட்ட அளவிற்கு விளம்பரப்பலகை வைத்துக்கொள்ள, கொள்கை முடிவிற்காகவும் (Policy decision) மற்றும் அரசின் அனுமதி கோரவும்,
4) அரசின் கொள்கை முடிவிற்கான ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு தற்காலிகமான பணி ஆணை (Provisional Work Order) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டியும் ,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 96/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 53/2008 நாள்:16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

> "விளம்பர பலகைகள் அகற்றுவதற்கு முன்னர் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளதால், தற்பொழுது விளம்பர பலகைகள் அகற்றப்பட்ட பின்னர் அதிக வருமானம் வர வாய்ப்புள்ளதால் மறு ஒப்பந்தங்கள் கோர மன்றம் தீர்மானிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/370/2008**
**ஆணையரின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :157/2008 பொருள் எண்.49

**தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி தோராய மதிப்பீட்டுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, கீழ்கண்ட போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டது.

TNUIFSL மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee) ஆகியோர் கலந்துக் கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்பில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்க்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியார் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம்(Transfer of Development Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்,
3. பெறப்படும் வடிவமைப்பின் படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும்,

கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர். கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனிடையே மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக ரூ.3,33,00,000/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் தனது கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.18,78,985/– மற்றும் 1,55,760/–க்கு மதிப்பீடுகள் அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால் இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.26,00,00,000/–க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் தோராய மதிப்பீட்டு தொகைக்கு மன்ற ஒப்புதல் மற்றும் அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும். எனவே, இக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படின் கீழ்க்காணும் இனங்களுக்கு;

**பா.து.ந.க.எண்.பி3/370/2008**

1. தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நில ஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.26,00,00,000/–க்கு அனுமதியும்,
2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,
3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை தவணை முறையில் வழங்க அனுமதியும்,
4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 90/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 54/2008 நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :158/2008 பொருள் எண்.50

**10 எண்ணிகையில் ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் (Haulage Tipper ) கொள்முதல் செய்யும் பணி**

சென்னை மாநகராட்சியில், துப்புரவுப் பணிகளில் மண்டலங்களில் சேகரிக்கும் குப்பைகளை மண்டல குப்பை மாற்று நிலையங்களிலிருந்து ( Zonal Transfer Stations) குப்பை கொட்டுமிடத்திற்கு (Dumping Site) எடுத்துச் செல்ல லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கனரக வாகனங்களின் மூலம் ஒரு நடைக்கு ( Trip) சுமார் 3 முதல் 5 மெட்ரிக் டன் எடையுள்ள குப்பைகள் மட்டுமே எடுத்து செல்ல முடிகின்றது. இதனால், அடிக்கடி குப்பை மாற்று நிலையங்களில் குப்பைகள் அதிகமாக தேக்கம் ஏற்பட்டு துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேடு உண்டாகிறது. இவற்றை தவிர்க்கும் பொருட்டு ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் மூலம் குப்பை எடுத்து செல்ல கீழ் வரும் காரணங்களுக்காகத் தீர்மானிக்கப்பட்டது .

1) தற்சமயம் 4 முதல் 5 டன்கள் எடையுள்ள குப்பைகளை எடுத்துச்செல்ல பயன்படுத்தப்பட்டுவரும் கனரக வாகனங்களுக்கு பதிலாக, ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் மூலம் 9 டன்கள் எடைக்கும் மேலாக குப்பைகளை எற்றிச் செல்ல முடியும். ஆகவே ஒரே வண்டியில் கிட்டத்தட்ட இருமடங்கு அளவு குப்பைகள் ஏற்றிச் செல்ல முடிவதனால் **எரிபொருள் சிக்கனப்படுத்தப்படுகிறது.** மற்றும் இரு கனரக வாகனங்களுக்குப் பதிலாக ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகனம் மட்டுமே பயன்படுத்துவதினால் **ஒரு ஓட்டுநர் ஊதியம் மிச்சப் படுத்த முடியும்.**

2. தற்சமயம் மண்டலங்களில் சேகரிக்கும் குப்பைகள், கனரக வாகனங்கள் மூலம் குப்பை கொட்டும் வளாகத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் காம்பேக்டர்கள் பயன்படுத்தப்படும் போது குப்பைகள் மண்டல குப்பை மாற்று நிலையங்களில் கொட்டப்படும் போது குப்பை மாற்று நிலையங்கள் விரைவாக நிரம்பி விடுவதைத் தவிர்க்கும் பொருட்டு ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மூலம் குப்பைகளை எடுத்துச் சென்றால், அதிக குப்பை, மண்டல குப்பை மாற்று நிலையங்களில் தேங்குவது குறைக்கப்படும்.

3. தற்சமயம் குப்பைகளை எடுத்துச் செல்லும் கனரக வாகனங்கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், புதியதாக மாற்றப்பட வேண்டியுள்ளது.

4. ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் பின்புறம் Multi Axle பொருத்தப்பட்டிருப்பதால், குப்பை கொட்டுமிடத்தில் கனரக வாகனங்கள் சேற்றில் அழுந்தி பழுதடைவது தவிர்க்கப்படுகிறது.

5. மூடியுடன் கூடிய இந்த ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மூலம் குப்பைகள் எடுத்துச் செல்லப்படுவதால், குப்பைகள் சாலைகளில் சிந்துவதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் சாலைகளின் சீர்கேடு ஆகியன தவிர்க்கப்படுகிறது.
மேலும் குப்பைகளை திறந்த லாரிகளில் அனுப்பக் கூடாது என்ற விதியும் அனுசரிக்கப்படுகிறது.

6. இவ்வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டவுடன் பத்தாண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டு மிகவும் பழுதடைந்த கனரக வாகனங்கள் படிப்படியாக கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இ.பொ.து.ந.க.எண். எம்1/5378/2007**

மேற்கண்ட நிலையில் 22 எண்ணிக்கைகள் கொண்ட ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமாக பத்து ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ஒப்ப அறிவிப்பு, தின இதழ்கள், மாவட்ட செய்தி மலர் மற்றும் சென்னை மாநகராட்சி செய்தி மலர்களில் வெளியிடப்பட்டு 14.12.2007 அன்றுஒப்பம் திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன. (1) திருவாளர்கள் அசோக் லேலண்ட் நிறுவனம் தனது ஒப்ப வைப்பு தொகையாக ரூ. 1,70,000/– வங்கி உத்தரவாதம் சமர்ப்பித்தும் (2) திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடட் நிறுவனம் தனது ஒப்ப வைப்பு தொகையாக ரூ. 2,00,000/– க்கு வங்கி உத்தரவாதம் சமர்ப்பித்தும் கலந்து கொண்டார்கள். இவ்வொப்பத்தில் கலந்து கொண்ட தகுதி வாய்ந்த இவ்விரண்டு நிறுவனங்களின் கோரிய விலைப்புள்ளிகள் விவரங்கள் பின்வருமாறு: :–

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி **திருவாளர்கள்** | ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகன விலை ரூ. | 10 ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் மொத்த விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | சுந்தரம் மோட்டார்ஸ் சென்னை. | 19,09,119/– | 1,90,91,190/– |
| 2. | அசோக் லேல்ண்ட் லிமிடெட், சென்னை | 19,23,171/– | 1,92,31,710/– |

மேற்படி இரு நிறுவனங்களும் அளித்த மொத்த விலையினை ஒப்பிடுகையில் திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனம் அளித்த மொத்த விலை குறைந்த விலைப்புள்ளியாகும். எனவே, திருவாளர்கள். சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனத்தை ஒப்ப விலைப்புள்ளி நிலையினை குறைத்து வழங்கும்படி 17/12/2007 நாளிட்ட கடிதம் மூலமாக கேட்டு கொள்ளப்பட்டது. அதற்கு அந்நிறுவனம் தற்போது விலையினை குறைக்க இயலாது என 18.12.2007 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துக் கொண்டுள்ளனர். மீண்டும் அந்நிறுவனத்தை விலைக் குறைப்பு செய்ய கேட்டுக் கொண்டதன் பேரில் அந்நிறுவனம் தனது 18.03.2008 நாளிட்டக் கடிதத்தில் தனது ஒப்ப விலையில் ஒரு வாகனத்திற்க ரூ.15,000/– வீதம் 10 வாகனங்களுக்கு ரூ.1,50,000/– விலைக் குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்கள். அதன்படி, ஒரு வாகனத்தின் விலைக்குறைப்புக்குப்பின் மொத்த விலையாக ரூ.18,94,119/–ஆகும். தற்போது 19.03.2008 அன்று திறக்கப்பட்ட இரண்டாவது ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட இரு ஒப்பந்ததாரர்களில் தகுதி வாய்ந்த ஒரே ஒப்பந்ததாரர் திருவாளர் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் ஒரு வாகனத்திற்கு ரூ.19,08,171/– வீதம் 10 வாகனங்களுக்கு ரூ.1,90,81,710/– ஒப்ப விலையாக வழங்கியுள்ளார்கள். மேலும் இந்நிறுவனத்தை விலைக் குறைக்க கேட்டுக் கொண்டதின்பேரில் ஒரு வாகனத்தின் மொத்த விலையாக ரூ.18,94,119/– என குறைத்து வழங்கியுள்ளார்கள். இவ்விலையானது முந்தைய ஒப்பத்தில் குறைந்த நிலை ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளிக்கு சமம்.

இக்கோப்பு 14.1.2008 , 12.2.2008 மற்றும் 8.4.2008 ஆகிய தேதிகளில் ஒப்பக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்பக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட இச்செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்முதல் செய்யவும் பரிந்துரைக்கப்படுகிறது. இதுகுறித்து மன்றத் தீர்மான எண்: 659/2007, நாள்: 29/12/2007 ன்படி அரசின் நிர்வாக அனுமதி வேண்டியும் ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்ற அனுமதி பெறப்பட்டது.

எனவே,

(1) ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த அசோக் லேலண்ட் வாகன உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரான திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து 10 எண்ணிக்கைகள் ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மொத்த விலையான ரூ.1,89,41,190/–க்கு கொள்முதல் செய்யவும்,

(2) திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனம் கேட்டு கொண்டுள்ளபடி ரூ.1,89,41,190/– ஐ முன்பணமாக வழங்கவும்,

(3) மேற்கண்ட இச்செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இருந்து வழங்கவும்,

(4) திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவீதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

(5) மேற்கண்ட இனங்கள் ஏற்கப்படின், ஒப்பம் கோரி முடிவு எடுப்பதற்கான அனுமதி

ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டு, அரசின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கியுள்ள நிலையில் கொள்முதல் செய்ய அனுமதிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 98/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 55/2008 நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :159/2008 பொருள் எண்.51

**நில ஒதுக்கீடு**

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அவர்களின் 11.12.2007 நாளிட்ட கடிதத்தில் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னை மாவட்டம் எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம் பிளாக் எண்.6, நகர புல எண்கள் 18, 19 மற்றும் 20 சென்னை மாநகராட்சி மண்டலம்–5 , வார்டு எண். 68, கஜபதி நாயுடு தெருவில் உள்ள சுமார் 4, 1/4, கிரவுண்டு நிலம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதாக காலியாக உள்ளதாக தெரிய வருகிறது என்றும் தெரிவித்து, மேற்கண்ட இடத்தில் இவ்வலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை கோரியுள்ள மேற்படி நிலம் சென்னை மாவட்டம் எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம் அமிஞ்சிகரை கிராமம் பிளாக் எண்.6, நகர புல எண்கள். 18, 19, 20 சம்பந்தப்பட்ட புலங்களாகும். இந்த புலங்கள் மூன்றும் தற்போது சென்னை மாநகராட்சி வசம் நான்கு பக்கங்களிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு காலியாக உள்ளது. இதன் மத்தியில் சிறிய கூரை கொட்டகை அமைந்துள்ளது. இந்த புலங்கள் மூன்றும் அடுத்தடுத்து இணைந்து அமைந்துள்ளது. இந்த இடம் சென்னை மாநகராட்சிக்கு உரிமையான இடமாகும். இந்த இடத்தின் மொத்த விஸ்தீரணம் 4 மனை, 1205 சதுர அடி ஆகும் .

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அரசு மற்றும் அரசு சார்ந்த பிற துறைகளுக்கு அளிக்க வேண்டுமெனில் அந்நிலங்களுக்கு சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயம் பெற்று கொண்டு வழங்க வேண்டுமென அரசாணை எண். 35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 17.02.1997லும் , குத்தகைக்கு வழங்கும் நிகழ்வுகளில் சந்தை விலை மதிப்பில் 1 விழுக்காடு + 1 ரூ தலவரி + 5 ரூ தலமேல்வரி வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகை வழங்க அரசாணை (நிலை) எண்.460 வருவாய் (நிமு2) துறை, நாள் 04.06.1998லும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை கோரியுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை சந்தைவிலையின் அடிப்படையில் விற்பனை செய்திடவோ அல்லது சந்தை விலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை (+1ரூ தலவரி + 5ரூ தலமேல்வரி) வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு அளிக்கவோ அரசின் ஆணையினை 14.01.2008 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் மூலம் கோரப்பட்டது.

06.02.2008 நாளிட்ட அரசு கடிதத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலகம் கட்ட தேவைப்படும் நிலத்தை அத்துறைக்கு நடைமுறையிலுள்ள விதிகளின்படி குத்தகைக்கு விட சென்னை மாநகராட்சி மன்றத்தின் இசைவினை தீர்மானம் மூலம் பெற்று அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 5வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.01, நாள்.14.02.2008ல் மேற்படி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட சந்தைவிலை மதிப்பில் வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு இட ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டது. பின்னர் தீர்மான எண்.103/2008, 29.02.2008ல் மேற்படி பொருளில் தற்போதைய சந்தை விலையில் 1% மற்றும் 1%தலவரி +5%தலமேல்வரி மதிப்புடன் (மொத்தம் 7%) சேர்த்து வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு இடஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி அளித்தது.

இது தொடர்பாக அரசுக்கு மீண்டும் கடிதம் அனுப்பியதில், அரசாணை (நிலை) எண்.47, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள். 24.03.2008ல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், அமிஞ்சிகரை கிராமம், கஜபதி தெருவில் நகர புல எண்கள். 18, 19, மற்றும் 20ல் உள்ள 4 மனை மற்றும் 1205 சதுர அடி நிலத்தை சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.103/2008, நாள்.29.02.2008ன்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு அலுவலகம் கட்ட அரசாணை (நிலை) எண்.460, வருவாய் (நிமுஉ) துறை நாள் 04.06.1998ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள குத்தகைத்தொகை அடிப்படையிலும் மற்றும் நடைமுறையிலுள்ள அரசு விதிமுறைகளின்படியும் நீண்டகால குத்தகைக்கு விட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/4192/2007</u>

மேற்காணும் 24.03.2008 நாளிட்ட, 47 எண்ணிட்ட அரசாணையை செயல்படுத்த மன்றத்தின் பின்னேற்பு அனுமதியுடன்,

(i) 30 ஆண்டுகால குத்தகைக்கு விடுவதற்கும்,
(ii) இந்நிகழ்வில் அவசர அவசியம் கருதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேற்படி நிலத்தில் அலுவலகம் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.47, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள். 24.03.2008ல் அனுமதி வழங்கியபடி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், அமிஞ்சிகரை கிராமம், கஜபதி தெருவில் நகர புல எண்கள். 18, 19, மற்றும் 20ல் உள்ள 4 மனை மற்றும் 1205 சதுர அடி நிலத்தை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேற்படி நிலத்தை அலுவலகம் கட்டுவதற்கு மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அரசாணை (நிலை) எண்.460, வருவாய் (நிமு2) துறை, நாள் 04.06.1998ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள குத்தகைத்தொகை அடிப்படையிலும் மற்றும் நடைமுறையிலுள்ள அரசு விதிமுறைகளின்படியும் 30 ஆண்டுகால குத்தகைக்கு விடுவதற்கும் இந்நிகழ்வில் அவசர அவசியம் கருதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேற்படி நிலத்தில் விதிமுறைகளை அனுசரித்து அலுவலகம் கட்டுவதற்கு மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இந்நிகழ்வுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நிலைக்குழு (வமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 58/2008 நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. “

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.துந.க.எண்.எஸ்சி2/2758/2007**
**ஆணையரின் 31.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :160/2008 பொருள் எண்.52

**நில மாற்றம்**

மண்டலம்–5, வார்டு எண்.75ல் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான சமூக நலக்கூட கட்டடம் ஒன்று இயங்கி வந்ததாகவும், தற்சமயம் இந்த சமூக நலக்கூடம் மூடி கிடப்பதாகவும், பொது மக்கள் நலன் கருதி இந்த சமூக நலக்கூடத்தை வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கையகப்படுத்தி சென்னை மாநகராட்சியின் மூலம் நவீன வசதிகளுடன் கூடிய சமூக நலக்கூடம் அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு 14.08.07 நாளிட்ட கடிதத்தில் ஆளுங்கட்சித் தலைவர் (திமுக) அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட அரும்பாக்கம் திட்டப்பகுதியிலுள்ள 3 கிரவுண்டு பரப்பளவுள்ள சமூக நலக்கூடத்தின் விலை ரூ.2,50,00,000/– ஆகும் எனவும், இவ்விலையினை செலுத்தி இந்த சமூக நலக்கூடத்தினை பெற்றுக்கொள்ள சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்குமாறு 22.09.2007 நாளிட்ட தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதிவாரிய திட்டப்பகுதியில் இந்த சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலம் உட்பட மொத்தம் 73.73 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மனை ஒன்றுக்கு ரூ.2400/– என்ற கிரய அடிப்படையில் அரசாணை எண். 758 ந.நி.ம.கு.வ.துறை நாள்.24.06.1986 ன்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சென்னை மாநகராட்சியால் ஒப்படைக்கப்பட்ட நிலமாகும்.

இந்த நிலத்திற்கு உண்டான கிரயத் தொகையினை மனை ஒன்றுக்கு ரூ.1400/– என்ற அடிப்படையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் 1986 ஆம் வருடத்தில் செலுத்தி உள்ளது. ஆனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மேற்கண்ட 73.73 ஏக்கர் நிலத்திற்கு உண்டான கிரயத்தொகை இதுவரை சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கப்பெறவில்லை.

மேற்படி சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலத்தின் மூல உரிமைதாரர் சென்னை மாநகராட்சி என்பதாலும், மேற்படி நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் பொது உபயோகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாலும், இந்த நிலத்திற்கு கிரயத்தொகையாக ரூ.2,50,00,000/–யினை செலுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. இந்த நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இலவசமாகவே சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

மேற்படி சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து சென்னை மாநகராட்சி இலவசமாக எடுத்துக் கொள்வதற்கு 5வது மண்டல வார்டுகுழு தனது தீர்மானம் எண். 06/ நாள்.12.12.07 ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே மண்டலம்–5, வார்டு எண்.75, அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனி தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய திட்டப்பகுதியில் சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு இலவசமாக ஒப்படைப்பு செய்யுமாறு கோரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு முன் மொழிவு அனுப்புவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வமநி) மூலமாக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 57/2008 நாள்: 16.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :161/2008 பொருள் எண்.53

**அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி**

05/01/2008 நாளிட்ட அரசாணை பல்வகை எண்.3, நிதி(படிகள்)துறையில், 2006 – 2007 ஆம் ஆண்டிற்கு குறிப்பிட்ட மிகைச் சம்பளம் / தனியான குறிப்பிட்ட மிகைச்சம்பளம் அரசாங்கத்தின் அனைத்து நிரந்திர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கும் மற்றும் நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் நிரந்தர கால ஊதியம் பெறும் காங்க் மஸ்தூர்(Gang Musthoor)களுக்கும் மற்றும் உள்ளாட்சி மற்றும் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் முறையான ஊதிய விகிதத்தில் பணிபுரியும் மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2006–2007 ஆம் நிதியாண்டிற்கான மிகைச் சம்பளம் 30 நாள் சம்பளத்தின் அடிப்படையில், 30 நாள் சம்பளம் மிகைச் சம்பளமாக அளிக்கப்பட வேண்டுமென்றும், 31/03/2007 அன்றைய தேதியில் உள்ள ஊதியத்தின் அடிப்படையில் பணம் பெறுபவர்களுக்கு மிகை ஊதியம் ஒரு மாதத்திற்கு ரூ.2500/–க்கு மிகாமல் உள்ள தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகைச் சம்பளத்தின் கீழ் வராத முதல் மற்றும் இரண்டாம் நிலை பிரிவு பணியாளர்களுக்கு சிறப்பு குறிப்பிட்ட மிகைச் சம்பளம் ரூ.1000/– அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகைச் சம்பளம்/குறிப்பிட்ட மிகைச் சம்பளம் அரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும்.

வகுப்பு A மற்றும் B பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள், பல்கலைகழக மானிய குழு அலுவலர்கள், அனைத்து இந்திய தொழிற்கல்வி மன்ற அலுவலர்கள் ஆகியோர் மிகைச் சம்பளம் பெற தகுதியில்லாத காரணத்தினால், அரசு அவ்வலுவலர்களுக்கு குறிப்பிட்ட மிகைச் சம்பளம் ரூ.1000/–மட்டும் வழங்க முடிவு செய்துள்ளது.

2006–2007 ஆம் ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றிய தினக்கூலி மற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள், கிராம பணியமைப்பில் நிலையில்லா ஊதியம் பெறுவோர் / மத்திய சத்துணவு திட்ட பணியாளர்கள், மாதாந்திர உழைப்பூதியம் மற்றும் தொகுப்பு ஊதியம் பெறும் பணியாளர்கள் சில்லரை செலவீனங்கள் மூலம் அளிக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட மாத விகித உதியம் பெறும் பகுதி நேர மற்றும் முழு நேர பணியாளர்களுக்கும் சிறப்பு குறிப்பிட்ட மிகைச் சம்பளம் ரூ.1000/– அனுமதிக்கத்தக்கதாகும்.

மாநகராட்சிகள், வாரியங்கள்/கழகங்கள் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் ஆகிய மிகைச்சம்பளம் மற்றும் கருணை ஊதியம் பெறாத நிறுவனங்களில் அயற்பணி அடிப்படையில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் மிகைச்சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் ‘‘முதல், இரண்டு மூன்று மற்றும் நான்காம் நிலை ‘‘ பணியாளர்களுக்கும் அரசு அறிவித்த மிகைச் சம்பளம் / குறிப்பிட்ட மிகைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் மிகைச் சம்பளம்/ குறிப்பிட்ட மிகை சம்பளத்தினால் சென்னை மாநகராட்சியில் 2007– 2008 ஆம் நிதியாண்டில் ஏற்படும் கூடுதல் செலவீனம் ரூ. 4.00 கோடி ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அரசு ஆணை பல்வகை எண். 3, நிதி (படிகள்) துறை, நாள். 05.01.2008யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.44/2008 நாள்: 16.4.2008–ன்படி அரசாணை பல்வகை எண்.3, நிதி (படிகள்) துறை, நாள் 05.01.2008யினை சென்னை மாநகராட்சியில் நடை முறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்